# Airtel புதிதாக 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' பெக்கேஜ்களை அறிமுகம் செய்கிறது

- 'My Airtel' App ஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்து 99 ரூபா ரீஜார்ஜ்களுக்கும் 100% மேலதிக டேட்டா

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்த தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான எயார்டெல் லங்கா நிறுவனம் புதிதாக 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' பெக்கேஜ் மூலம் இரட்டிப்பு டேட்டா (double data) சலுகையை வழங்குவதாக அறிவித்துள்ளது. 'My Airtel' App ஊடாக 99 ரூபா ரீஜார்ஜ் செய்து 100% மேலதிக டேட்டாவை வழங்கி பாவனையாளர்களுக்கு உச்ச அளவில் நன்மையை வழங்குவதே இந்த புதிய சலுகையின் நோக்கமாகும்.

இன்று சந்தையில் ஒட்டுமொத்த அழைப்பு நேரத்தை இலக்காகக் கொண்ட பெக்கேஜ்களில் உச்ச அளவிலான சலுகையைப் பெற்றுக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' பெக்கேஜை பயன்படுத்த முடியும். இலங்கையிலுள்ள எயார்டெல் பாவனையாளர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய மற்றும் முழுமையான ஸ்மார்ட் தொலைபேசி அனுபவத்தை பெற்றுக் கொடுத்த எயார்டெல்லின் விரிவான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாகவே இந்த புதிய பெக்கேஜ் உருவாக்கப்பட்டுள்ளது.

எயார்டெல் ரீசார்ஜ் பெறுமதிக்கு சமமான அழைப்பு நேரத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன், 1000 SMSகள் மற்றும் 350MB டேட்டா உட்பட 21 நாட்களுக்கு செல்லுபடியாகக் கூடிய விதத்தில் 99 ரூபா பெக்கேஜை முதலில் அறிமுகம் செய்தது. 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' கொடுப்பனவை அறிமுகம் செய்ததுடன் 'My Airtel' App ஊடாக ரீசார்ஜ் செய்வதன் மூலம் எயார்டெல் பாவனையாளர்களுக்கு இப்போது மேலதிகமாக 350MBயுடன் சேர்த்து மொத்தமாக 700MB டேட்டாவை பெறமுடிகிறது. பாவனையாளர்கள் தமது கணக்கு மிகுதி அல்லது கடன் வரவு அட்டையைப் பயன்படுத்தி 'My Airtel' App ஊடாக இந்த பெக்கேஜை பெற்றுக் கொள்ளலாம்.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த எயார்டெல்லின் பிரதம விற்பனை அதிகாரி சந்திரசேகர் சிங் சௌஹான், "இலங்கையிலுள்ள இளம் சமூகத்தின் மத்தியில் நெருக்கமாக இணைந்துள்ள ஒரு இலச்சினையாக இருப்பதற்கு நாம் எப்பொழுதும் புதிய வழிமுறைகளை தேடிக்கொண்டிருக்கின்றோம். இவ்வாறான இளைஞர்களின் மேம்பாட்டிற்காக சேவைகளை வழங்குவதற்கு, விசேடமாக Voice சேவைகளுக்கு மேலாக மிகுந்த கேள்வியைக் கொண்ட டேட்டா மற்றும் குறுந்தகவல் போன்ற சேவைகள் குறித்து கவனம் செலுத்துகிறோம். எயார்டெல் 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' போன்ற பெக்கேஜ்களை விசேடமாக உருவாக்க காரணம் பாவனையாளர்களின் மாற்றமடைந்து வரும் தேவைகளேயாகும். இந்த பெக்கேஜ்களை 'My Airtel' App ஊடாக பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும்." என தெரிவித்தார்.

புதிதாக 'டேட்டா டபல்' 'அவாசி டபல்' பெக்கேஜ் உடன் 'Airtel 99 Tik Tok Challenge' என்ற பெயரில் மற்றுமொரு போட்டியொன்று பாவனையாளர்களுக்காக எயார்டெல் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர் விளம்பர ஒலிப்பதிவு (promotional soundtrack) மாதிரியை பயன்படுத்தி #airteldoubledata என்ற hash Tag உடன் உருவாக்கப்பட்ட வீடியோவை தமது Tik Tok கணக்கின் ஊடாக Upload செய்ய வேண்டும். இந்த விளம்பர ஒலிப்பதிவு மாதிரியை Tik Tok சமூக வலைத்தள பக்கத்தில் 'Airtel 99 Tik Tok' என டைப் செய்து தேட முடியும். இந்த போட்டியின் முதல் வெற்றியாளருக்கு ஸ்மார்ட் தொலைபேசி ஒன்றும் இரண்டாவது வெற்றியாளருக்கு Voucherகளும் பரிசாக வழங்கப்படும். இந்த 'Airtel 99 Tik Tok' போட்டி 2020 மார்ச் மாதம் 15ஆம் திகதி நிறைவடையும்.

'My Airtel' App இலவசமாக பாவனையாளர்களுக்கு சேவையை வழங்கும் ஒரு Appஆகும். இலங்கையில் அனைத்து எயார்டெல் பாவனையாளர்களுக்கும் இதிலிருந்து நன்மைகளை அனுபவிக்க முடியும். 'My Airtel' Appஐ பயன்படுத்தி பாவனையாளர்களுக்கு அவர்களது கணக்கிற்கு செல்ல முடிவதுடன் டேட்டா பயன்பாடு மற்றும் கணக்கு மிகுதியை சரிபார்த்தல், ரிசார்ஜ் செய்தல், கட்டணம் செலுத்துதல் (Pay Bill) மற்றும் பாடல்

அல்லது திரைப்படம் பார்த்தல் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்து அனுபவிக்க இலகுவான முறையில் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பாவனையாளர்களுக்கு உச்ச அளவிலான நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எயார்டெல் நிறுவனம் தமது பாவனையாளர்களுக்கு கட்டணம் இன்றி 4G Sim அட்டைக்கு தம்மிடம் ஏற்கனவே இருக்கும் Sim அட்டையை மாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன் அதற்காக 5GB டேட்டா இலவசமாக கிடைக்கின்றமை விசேட அம்சமாகும். 780 அல்லது *780# என Type செய்து அல்லது Sim அட்டை மாற்ற அருகிலுள்ள விற்பனை முகவர் நிலையத்திற்குச் சென்று ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எயார்டெல் பாவனையாளர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

## Bharti Airtel Lanka வை பற்றி

2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒருமில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல் நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலயமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.